# வரஷக்தி ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

## குறை தீர்க்கும் வழிமுறை

இந்த குறை தீர்க்கும் வழிமுறை அவ்வப்போது தேசிய வீட்டு வசதி வங்கி புதுப்பித்து வழங்கும் சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேசிய வீட்டு வசதி வங்கி கூறப்பட்ட நெறிமுறையை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள்:

1. வி. எச். பி. எல்-ன் ஊழியர்கள் வாடிக்கையாளர்களின் நலனுக்கு எந்தவித பாரபட்சமும் இல்லாமல் நல்ல நம்பிக்கையுடன் செயல்படுகிறார்கள்.
2. வாடிக்கையாளர்கள் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படுகிறார்கள்.
3. அனைத்து புகார்களும் முக்கியமானவையாகும். அவை சரியான நேரத்தில் தீர்க்கப்படுகின்றன.
4. வாடிக்கையாளர்களுக்கு தங்கள் குறைகளை தீர்ப்பதற்கான வழிமுறை குறித்து தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் குறைகளை பின்வரும் முறையில் நிவர்த்தி செய்யும்):

**முறை 1**

வி. எச். பி. எல் - இன் எந்தவொரு வாடிக்கையாளரும் கிளை மேலாளரிடம் புகாரின் விவரங்களை குறிப்பிட்டு கடிதத்தின் மூலம் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அல்லது vhfpl@varashaktihousing.co.in என்ற மின்னஞ்சல் மூலமாகவும் புகாரை அனுப்பலாம். அல்லது 044-43413208 என்ற தொலைபேசி எண்ணில் அழைக்கலாம்.

**முறை 2**

கிளை மேலாளர் வழங்கிய பதிலில் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை அல்லது 7 வேலை நாட்களுக்குள் எந்த பதிலும் கிடைக்கவில்லை என்றால் அல்லது கிளை மேலாளருக்கு எதிராக புகார் வந்தால், வாடிக்கையாளர் புகாரை குறை தீர்க்கும் அலுவலர் திரு. பாலாஜி எஸ் . அவர்களுக்கு பின்வரும் முகவரியில் எழுத்தின் மூலம் தெரிவிக்கலாம்:

Mr Balaji S
Grievance Redressal Officer
Varashakti Housing Finance Private Limited
New No.33, Old No.14, 48th Street, 9th Avenue,
Ashok Nagar, Chennai 600 083.
Phone : 044-43413260,

Email: balaji.s@varashaktihousing.co.in

(புகார் தெரிவிக்கும்போது தயவுசெய்து உங்கள் கடன் கணக்கு எண் மற்றும் தொடர்பு எண்ணை தவறாமல் கடிதத்தில் குறிப்பிடவும்)

(புகார் நிவர்த்தி செய்வதற்கான காலக்கெடு)

1. புகார்களுக்கு, கிளை மேலாளர் அலுவகத்தில் புகார் வந்த நாளிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் வாடிக்கையாளருக்கு பதிலை அனுப்ப வேண்டும்.
2. வாடிக்கையாளர்கள் புகாரை குறை தீர்க்கும் அலுவலகத்திற்கு நேரடியாக புகார்கள் வந்தால், குறை தீர்க்கும் அலுவலர் வாடிக்கையாளருக்கு பதிலை புகார் கிடைத்த நாளிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.
3. புகாரை ஆராய்ந்த பின்னர், இறுதி பதில் அதிகபட்சமாக புகார் கிடைத்த 6 வாரங்களுக்குள் வாடிக்கையாளருக்கு தெரிவிக்கப்படும்.

**முறை 3 – புகாரை தேசிய வீட்டு வசதி வங்கிக்கு தெரியப்படுத்தலாம்**

நிறுவனம் வழங்கிய பதிலில் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை என்றல் அல்லது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் எந்த பதிலும் கிடைக்கவில்லை என்றால், வாடிக்கையாளர் தேசிய வீட்டு வசதி வங்கிக்கு புகாரை பின்வரும் முகவரியில் தெரிவிக்கலாம்:

The General Manager
National Housing Bank
Department of Regulation and Supervision (Complaint Redressal Cell)
4th Floor, Core 5A, India Habitat Centre
Lodhi Road
New Delhi 110003

புகாரை crcell@nhb.org.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்

மற்றும் https://grids.nhbonline.org.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம்…